மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.
முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் நாள் திங்கட்கிழமை

<u>இடைக்கால மனு எண். 5/2025</u>
<u>இன்</u>
<u>அசல் வழக்கு எண். 89/2019</u>

தனிக்கொடி (எ) அரிகிருஷ்ணன் ....மனுதாரர் / வாதி

/ எதிர் /

1.பழனி (**இறப்பு**)
2.திருமூலன் (எ) கண்ணன் .....எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்
3.சங்குமுத்து
4.ராக்கு
5.முருகன் ..... Proposed எதிர்மனுதாரர்கள்/
3 முதல் 5 Proposed பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 23.01.2026 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

**1.** மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 22 ரூல் 4 மற்றும் பிரிவு 151ன் படி கடந்த 10.08.2025ம் தேதியன்று இறந்துபோன 1ம் பிரதிவாதி பழனியின் வாரிசுகளான 3 முதல் 5 Proposed எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>**2. மனுவின் சுருக்கம் :**</u>

தாவா வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளநிலையில், கடந்த 10.08.2025ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பழனி என்பவர் இறந்துவிட்டதால்

அவரது வாரிசுகளான 3 முதல் 5 **Proposed** எதிர்மனுதாரர்களை தாவா அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து அவர்களையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெற வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே இறந்துபோன 1ம் பிரதிவாதி பழனியின் வாரிசுகளை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து மனுவை மேல்நடத்த உத்தரவிட வேண்டுமென்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும்.**

ஒரு ஆளுடைய வழக்கு ஒரு ஆளுடன் முடிவதில்லை. இறந்துபோன 1ம் பிரதிவாதி பழனி என்பவரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்து வழக்கை நடத்துவதற்கு எஞ்சியுள்ளது.

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எனவே இறந்துபோன 1ம் பிரதிவாதி பழனியின் வாரிசுகளை தாவா வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

> “Audi alteram partem is a Latin phrase meaning ‘listen to the other side’, or “let the other side be heard as well”. It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them.”

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 பிப்ரவரி மாதம் 2ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.02 17:26:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.02 17:26:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.5/2025**
**in**
**OS. No. 89/2019**

**Dated: 02.02.2026**